உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# பயணம்

மாணவர் இதழ்

ஜனவரி 2016


**தொடர்புக்கு:**

✍ 2, பீட்டி சாலை,
சிங்கப்பூர் 209954

✆ 62980781

**இணையப் பக்கம்:**

www.uptlc.moe.edu.sg


புதிது மாணவர் கையேடு

**உள்ளே:**


| | |
|---|---|
| இதழைப் பற்றி | 1 |
| நிலைய இயக்குநர் பக்கம் | 1 |
| மாணவர் பதிவு | 2 |
| இணைப்பாடம் & விருப்பப்பாடம் | 2 |


**முக்கிய நிகழ்வுகள்:**

- மாணவர் பதிவு
  *4-5 ஜனவரி*
- உயர்தமிழ் வகுப்புக்கான தகுதிகாண் தேர்வு
  *13 ஜனவரி*
- உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தின் பொங்கல் திருநாள்
  *16 ஜனவரி*

## இதழைப் பற்றி...




அன்பு உள்ளங்களுக்கு...
வணக்கம்!
வாழிய நலம்!
**'பயணம்'** என்னும் தலைப்பில் அமைந்த இந்த இதழ்...

மாணவர்களுக்கும் அவர்தம் பெற்றோருக்கும் உதவ வேண்டும் என்ற உயரிய நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்விதழில் நிலைய நிகழ்வுகள், தேர்வு குறித்த அறிவிப்புகள், மாணவர்களின் கற்றலுக்கு உதவும் பகுதிகள், மற்றும் முக்கிய அறிவிப்புகள் போன்ற பல்வேறு அம்சங்கள் இடம்பெறும்.

மாணவர்களிடம் புத்தாக்கத்திறனை வளர்க்கும் வண்ணம் அவர்களின் படைப்புகளை வெளியிட்டு... ஊக்கம் அளிப்பதும் இதன் முதன்மை நோக்கங்களில் ஒன்று.

வகுப்பறைக் கற்றலுக்கு அப்பாலும் மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுத்துவது, அவர்களை எதிர்கால வாழ்விற்குத் தயார்ப்படுத்துவது, இதழியல் போன்ற புதுத் துறைகளை அறிமுகம் செய்வது போன்ற பல்வேறு தொலைநோக்குச் சிந்தனைகளோடு இவ்விதழ்... உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

*இப்படிக்கு...*
இதழ்க் குழு

## நிலைய இயக்குநர் பக்கம்

மாணவ நண்பர்களுக்குப் **புத்தாண்டு நல்வாழ்த்துகள்!**

புதிதாய்ப் பூத்திருக்கும் இந்தப் புத்தாண்டில் ஒவ்வொருவரும் பற்பல கனவுகளோடு வலம் வர எண்ணியிருப்பீர்! கனவுகாண்பது தவறில்லை; ஆனால், கனவை நனவாக்காமல் இருப்பதே தவறு. 'கனவு பெரியதாக இருக்கும்போது, உழைப்பு அதைவிடப் பெரியதாக இருக்க வேண்டும்' என்ற வாசகம் என்னைப் பெரிதும் கவர்ந்த மிகவும் முக்கியமான ஒன்று. உழைப்புத்தான் நமக்குத் தாரக மந்திரம்! அதை ஒழுங்காக நாம் செய்தாலே வெற்றி நிச்சயம்!

மாணவர்களாகிய உங்களுக்கு, மிக முக்கியமானதும் முதலாவதும் கல்வியே! அதிலும்... அதனைச் சார்ந்த கூறுகளிலும்... உழைப்பை முதலீடாக்கி, வெற்றிக்கனியைப் பறித்து, ருசியுங்கள்! சொல்வது எளிதானாலும், அதற்குப் பின்புலமாய் அமைந்த உழைப்பின் வியர்வைத் துளிகளைச் சிந்துபவருக்குத்தான் உழைப்பின் மேன்மை. தெரியும்.

ஆம்! நீங்களும் வெற்றியை நோக்கி உழைத்துப் பாருங்கள் – நாளடைவில் அதுவே சுகமாகத் தெரியும்.

நன்றி – வணக்கம்!

# மாணவர் பதிவு




பதிவு நாள்:
ஜனவரி 4 & ஜனவரி 5

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் தமிழ்மொழி பயிலும் (Sec 2 to Sec 5) மாணவர்களும்... உயர்நிலை ஒன்றில் புதிதாய்ச் சேரும் மாணவர்களும் கட்டாயம் தங்கள் பெயரையும் பிற விவரங்களையும் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதனடிப்படையில் 2016ஆம் ஆண்டில் உயர்நிலை இரண்டு முதல் உயர்நிலை ஐந்து வரை பயிலும் நிலைய மாணவர்கள் அனைவரும் **நிலைய இணையப்பக்கத்திற்குச்** சென்று தங்கள் பெயரையும் தேவையான பிற விவரங்களையும் பதிவு செய்துகொள்ளவும். உயர்நிலை ஒன்றில் சேர விரும்பும் மாணவர்கள் அனைவரும் உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்திற்கு நேரில் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்ய வருவோர் **PSLE Certificate & Student ez link card** போன்றவற்றை மறவாது எடுத்து வரவும்.

**பிற விவரங்கள் வகுப்பில்...**

# 2016-கல்வியாண்டிற்கான தகவல்கள்

## நிலைய இணையப் பக்கத்தில்...

- ⇒ வகுப்புகளுக்கான கால அட்டவணை
- ⇒ புத்தக விவரங்கள்
- ⇒ நிலைய நிகழ்வுகள்
- ⇒ தேர்வு அட்டவணை
- ⇒ மாணவர் கையேடு

### வகுப்புகளுக்கான கால அட்டவணை

மாணவர்கள் தேர்ந்தெடுக்கும் வகுப்புகளையும் அதற்கான நாள்களையும் அறிந்துகொள்ளலாம்.

### புத்தக விவரங்கள்

மாணவர்கள் இவ்வாண்டில் வாங்க வேண்டிய புத்தகங்கள், பயிற்சி ஏடுகள் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

### நிலைய நிகழ்வுகள்

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் இவ்வாண்டு நடைபெறவுள்ள நிகழ்வுகளையும் முக்கியமான தகவல்களையும் அறிந்துகொள்ள உதவும்.

### தேர்வு அட்டவணை

மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உதவும் வகையில் தேர்வுக்கால அட்டவணை இடம்பெற்றுள்ளது.

### மாணவர் கையேடு

மாணவர்களுக்கு உதவும் பல விவரங்கள் உள்ளே...

**இன்னும் புதுமையுடன் பிப்ரவரி மாத இதழ்!**

# இணைப்பாட நடவடிக்கை & விருப்பப்பாடத்திட்டம்

**மாணவர் சேர்க்கை...**



### இணைப்பாட நடவடிக்கை

சனிக்கிழமை தோறும் காலை 9.30 முதல் 11.30வரை... தொடக்கநிலை 3 முதல் தொடக்கக் கல்லூரி 2 வரை படிக்கும் தமிழ் மாணவர்களுக்கு... வீணை, வயலின், சித்தார், மிருதங்கம், தபேலா போன்ற இசை வகுப்புகளும் ... நடனம், வாய்ப்பாட்டு போன்ற பிற வகுப்புகளும் திறன்மிக்க பயிற்றுநர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றது.

பதிவு நாள்: **09.01.2016**

### தேசிய தமிழ்மொழி விருப்பப்பாடத் திட்டம் (NETP)

**NETP** வகுப்பில் பயில விரும்பும் உயர்தமிழ் **(Sec)** & தமிழும் தமிழிலக்கியமும் **(JC)** பயிலும் மாணவர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளவும்.

பதிவு நாள்: **11-13 Jan 2016**

**நிலைய இணையப் பக்க முகவரி: http://www.uptlc.moe.edu.sg**